நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள். 26.05.2022.

அன்புடையீர்,

இந்நகர்மன்றம் மே–2022ம் அவசர கூட்டம் வருகிற 27.05.2022 தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணிக்கு தந்தை பெரியார் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. கூட்டபொருள்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தாங்கள் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

26/05/2022

தலைவர்
ஆத்தூர் நகராட்சி.

பொருள்

1. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு பிளீச்சிங் பவுடர் 5000 கிலோ மற்றும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் 5000 கிலோ விநியோகம் செய்ய மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் முன்அனுமதி பெற்று ரூ.2.90 உத்தேச செலவினத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியதன்பேரில் 28.04.2022ம் தேதி முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைவிகிதம் |
|---|---|---|
| 1 | சன்பிரைட்டுல்ஸ்,<br>79/13, முகப்பேர் சாலை,<br>மன்னூர் பேட்டை, சென்னை–50 | பீளிச்சிங்பவுடர் கிலோ ஒன்றிற்கு ரூ. 40.00<br>சுண்ணாம்பு தூள்கிலோ ஒன்றிற்கு ரூ. 9.00 |
| 2 | ராணி என்டர்பிரைசஸ்,<br>தங்கசாலை தெரு, திருத்தணி. | பீளிச்சிங்பவுடர் கிலோ ஒன்றிற்கு ரூ. 52.00<br>சுண்ணாம்பு தூள்கிலோ ஒன்றிற்கு ரூ. 16.00 |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள மெஸர்ஸ்.சன்பிரைட்டுல்ஸ், 79/13, முகப்பேர் சாலை, மன்னூர் பேட்டை, சென்னை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினைவிநியோக உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (0177/2022/எச்1)

2 இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் மற்றும் பேருந்து நிலையம், மார்க்கெட், பூங்கா, உழவர் சந்தை ஆகிய பகுதிகளில் உள்ள சிறுநீர் கழிப்பிடம் ஆகியவற்றை சுத்தம் செய்ய கிருமி நாசினி, லைசால் 1000 லிட்டர் தேவைப்படுகிறது. கிருமி நாசினி வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. வருவாய் நிதியில் இருந்து செலவினம் ரூ.2.50 இலட்சம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டு நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்.1710/2022/எச்1)

3. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு லாரி எண்.டி.என்.30 டி– 7161–க்கு தகுதிச்சான்று பெறும்பொருட்டு பழுதுகளை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளது. பழுதுகளை நிவர்த்தி செய்ய ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.1,40,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) ஆகும். மேற்படி உத்தேச செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. வருவாய் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டு நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்.1352/2022/எச்1)

4. இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வார்டு பகுதியில் உள்ள தெருக்களிலும் அலைந்து திரியும் நாய்களை பிடித்து அப்புறப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் பொதுமக்களிடம் இருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே தெரு நாட்களை பிடித்து கருத்தடை செய்து வெறி நாய் தடுப்பூசியும் போட்டு மூன்று நாள் உணவு மற்றும் சிகிச்சை அளித்து மறுபடியும் பிடித்த இடத்திலேயே விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்கென மத்திய அரசின் விலங்குகள் நல வாரியத்தினால் அங்கீகரிக்கப்பட்டு விலங்குகளை கையாளும் பயிற்சி பெற் நபர்களை கொண்ட பதிவு செய்யப்பட்ட நிறுவனமான JEEVA KARUNYA NIMAL WELFARE CHARIIABLE TRUST, நாகர் கோவில் என்ற அமைப்பிற்கு தெரு நாய்களை டிப்பதற்கு உத்திரவு வழங்கிடவும், நாய் ஒன்றிற்கு ரூ.700/–ரூபாய் எழுநூறு மட்டும்) கருத்தடை றுவை சிகிச்சை செய்யவும் அறுவை சிகிச்சை மையம் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் யதாக மதிப்பீடு தயார் செய்து கட்டி கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

லுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்.0468/2022/எச்1)

5. திரு.பூமாலைநாய்க்கர் ஒப்பந்ததாரர் அவர்கள் தனக்கு வழங்கப்பட வேண்டிய காலங்ககடந்த வைப்புத் தொகை ரூ.14300/– திரும்ப வழங்க கோரியுள்ளார். அன்னாருக்கு வழங்கப்படவேண்டிய மேற்படி தொகை இவ்வலுவலக காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் வரவு வாக்கப்பட்டடுள்ளது. ( 2021– 2022 ம் ஆண்டு பதிவேடு வரவுவாக்கப்பட்டுள்ளது. ) மேற்கண்ட வைப்பு தொகையினை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனும வழங்கலாம்.( 2735/2019/அ3 )

6. இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணாபவள விழா மேற்குபுற கடை எண் – 1 காலியாக உள்ளதால் 20.05.2022ந் தேதி பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப் புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் கீழ்க்கண்டவாறு உச்ச ஏல கேள்வி தொகை கேட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் மற்றம் விலாசம் | மாதவாடகை உச்சஏல கேள்வி தொகை |
|---|---|---|
| 1 | திரு. சி.சின்னையன், த/பெ.சிங்காரம்<br>11/29, 74 கிருஷ்ணாபுரம்<br>கெங்கவல்லி போஸ்ட் | ரூ.2125/– |
| 2 | திரு,ஜீ.ராஜேந்திரன்<br>72, காந்திநகர்<br>ஆத்தூர் | ரூ.2110/– |

அலுவலக குறிப்பு

மேற்கண்ட இனத்திற்கு பொது ஏலத்தில் ரூ.2125/–த்தை கோரியுள்ள திரு.சி.சின்னையன்,த/பெ.சிங்காரம் அவர்களின் உச்ச ஏலக்கேள்வி தொகையினை மன்றம் ஏற்கலாம். ( 262/2022/அ4 )

7. இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பவள விழா மேற்குபுற கடை எண் – 2 காலியாக உள்ளதால் 20.05.2022ந் தேதி பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப் புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் கீழ்க்கண்டவாறு உச்ச ஏல கேள்வி தொகை கேட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் விலாசம் | மாதவாடகை உச்சஏல கேள்வி தொகை |
|---|---|---|
| 1 | திரு. சி.சின்னையன், த/பெ.சிங்காரம்<br>11/29, 74 கிருஷ்ணாபுரம்<br>கெங்கவல்லி போஸ்ட் | ரூ.2125/– |
| 2 | திரு,ஜீ.ராஜேந்திரன்<br>72, காந்திநகர்<br>ஆத்தூர் | ரூ.2110 |

அலுவலக குறிப்பு

மேற்கண்ட இனத்திற்கு பொது ஏலத்தில் ரூ.2125/–த்தை கோரியுள்ள திரு.சி.சின்னையன்,த/பெ.சிங்காரம் அவர்களின் உச்ச ஏலக்கேள்வி தொகையினை மன்றம் ஏற்கலாம். (262/2022/அ4)

8. இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி அங்காடி கடை எண் – 22 காலியாக உள்ளதால் 20.05.2022ந் தேதி பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப் புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் கீழ்க்கண்டவாறு உச்ச ஏல கேள்வி தொகை கேட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் விலாசம் | மாதவாடகை உச்சஏல கேள்வி தொகை |
|---|---|---|
| 1 | திரு. சு.பாண்டியன் த/பெ.சுப்பிரமணி<br>38/6, அலெக்சாண்டர் தெரு , ஆத்தூர் | ரூ. 2470 /– |
| 2 | திரு,ஆர்.செந்தில் குமார்<br>70/21,சீதாகேசவன் தெரு<br>ஆத்தூர் | ரூ. 2465/– |

அலுவலக குறிப்பு

மேற்கண்ட இனத்திற்கு பொது ஏலத்தில் ரூ.2470 /–த்தை கோரியுள்ள திரு. சு.பாண்டியன் த/பெ.சுப்பிரமணிஅவர்களின் உச்ச ஏலக்கேள்வி தொகையினை மன்றம் ஏற்கலாம். (262/2022/அ4)

9. இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய கிழக்குப்புற கட்டிடம் எண் – 1 காலியாக உள்ளதால் 20.05.2022ந் தேதி பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப் புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் கீழ்க்கண்டவாறு உச்ச ஏல கேள்வி தொகை கேட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் விலாசம் | மாதவாடகை+ உச்சஏல கேள்வி தொகை |
|---|---|---|
| 1 | திரு. ப.மணி த/பெ.ப.பழனிசாமி<br>103, வடக்குகாடு அப்பமசமுத்திரம், ஆத்தூர் | ரூ.7360/– |
| 2 | திரு.ஏ.எம்.சேகர்<br>279, ஏ காமராஜனார் சாலை ஆத்தூர் | ரூ.7000/– |
| 3 | திரு.ஆ.தணிகேசன் த/பெ. ஆறுமுகம்<br>15/35 வீட்டுவசதி வாரியம் கண்ணாடி மில், ஆத்தூர் | ரூ.7100/– |
| 4 | திரு.த.மோகன்<br>21/4சி, அம்மன் நகர் கோட்டை , ஆத்தூர் | ரூ.7400/– |
| 5 | திரு.வி.பாலமுருகன்<br>புதிய கல்லாநத்தம் ரோடு, முல்லைவாடி, ஆத்தூர் | ஏலம் கோரவில்லை |
| 6 | திரு.வி.செல்வம்<br>257ம் எல்.ஆர்.சி.நகர், கோட்டை ஆத்தூர் | ரூ.7370/– |

அலுவலக குறிப்பு

மேற்கண்ட இனத்திற்கு பொது ஏலத்தில் ரூ.7400/–த்தை கோரியுள்ள திரு.த.மோகன்அவர்களின் உச்ச ஏலக்கேள்வி தொகையினை மன்றம் ஏற்கலாம். (262/2022/அ4)

10. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட காந்திநகரில் உள்ள 7.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் இருந்து மக்களுக்கு மேட்டூர் குடிநீர் விநியோகத்தின்போது குளோரின் அளவு சரியான முறையில் கலந்து விநியோகம் செய்ய புதிய தொழில்நுட்ப முறையில் குளோரின் வாயுவை குடிநீர் செலுத்திய குடிநீர் விநியோகம் செய்திட இந்நகர்மன்ற தீர்மான எண் 39, நாள்.29.04.2022ல் அனுமதி வழங்கியுள்ளதற்கிணங்க, 18.05.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | M/s.R.K.Enterprises | 0.28%மதிப்பீட்டுவிலையைவிட குறைவு |
| 2 | M/s. Perfect Trading & Co | 2.35 %மதிப்பீட்டுவிலையைவிட அதிகம் |

16. சேலம் மாவட்டத்தில் 2022 ஏப்ரல் மாதத்தில் இருந்தே விட்டுவிட்டு மழை பெய்து வருகின்றது. இதனைத் தொடர்ந்து, தென்மேற்கு பருவ மழை ஆரம்பிக்கும் ஜீன் மாதத்திலிருந்து, டெங்கு கொசுப்புழு வளர்நிலைகள் அதிகரித்து டெங்கு காய்ச்சல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. டெங்கு காய்ச்சல் பரவாமலும், அதிகரிக்காமலும் தடுக்க டெங்கு கொசுப்புழு அடர்த்தியை, (House Index), டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி செய்து குறைக்க இந்த மாதத்திலிருந்தே தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், வாரத்தில் 6 நாட்களுக்கு, ஒரு நாளைக்கு 50 வீடுகள் வீதம் 300 வீடுகளுக்கு ஒரு DBC களப்பணியாளர் வீதம், டெங்கு கொசுப்புழு ஒழிப்புப்பணி செய்வதற்கு தேவையான தற்காலிக DBC களப்பணியாளர்களை உடனடியாக நகராட்சியில் நியமிக்கும்படி துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், சேலம் அவர்களது 09.05.2022ம் தேதிய ந.க.எண்–199/இ5/2020–ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்–1 முதல் 33 வரையிலான வார்டுகளுக்கு தற்சமயம் 16,948 வீடுகள் உள்ளன. ஒரு நாளைக்கு 50 வீடுகள் வீதம் 300 வீடுகளுக்கு ஒரு DBC பணியாளர் வீதம் மொத்தம் 36 DBC பணியாளர்களை நியமனம் முதற்கட்டமாக செய்து கொள்ளவும் மேலும், DBC பணியாளர்களை மகளிர் சுய உதவிக்குழு மூலம் ஒப்பந்தப்புள்ளிக் கோரி ஓர் ஆண்டிற்கு (ஜீன்–2022 முதல் மே–2023 முடிய) நியமனம் செய்து கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப்பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) DBC பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் அவர்களால் நிர்ணயம் செய்யும் செந்தூர விலைவிகித பட்டியலின்படி ஊதியம் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

17. இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 25ல் அண்ணாநகரில் கலைஞர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பூங்கா அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த பூங்காவை சுற்றியுள்ள வீடுகளின் கழிவு நீர் பூங்காவிற்கு விடப்பட்டு வந்த நிலையில் தற்போது அடைக்கப்பட்டுள்ளதால் மேற்படி குடியிருப்பு நீர் வெளியேற இடம் இல்லை என்பதால் மேற்படி பூங்காவை சுற்றி உள்ள தெருக்களில் மழைநீர் வடிகால் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ .4.80 இலட்சத்திற்கு மன்றதின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

18. இந்நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண்.16ல் உழவர் சந்தை பகுதியில் உள்ள கழிவுநீர் செல்லும் மழைநீர் வடிகால் அதிகம் மண் தேங்கியுள்ளதால், கழிவுநீர் செல்லாமல் உள்ளது. மேலும் முல்லைவாடி பகுதியில் சாலையின் இருபுறமும் முட்செடிகள் அதிகம் உள்ளதால், அவற்றை சுத்தம் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு ஜெ.சி.பி இயந்திரம் மூலம் சுமார் 15 மணி நேரம் பணி மேற்கொள்ளவும், அதற்குரிய உத்தேச செலவினம் ரூ.20000/– வருவாய் நிதியில் இருந்து செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

19. பொது சுகாதாரப்பிரிவில் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உள்ள வீடுகள் மற்றும் கடைவீதி பகுதியில் குப்பைகளை தரம் பிரித்து வாங்கப்பட்டு வருகிறது. அப்பணிக்கு தேவையான குப்பைகளை டப்பா மற்றும் தள்ளுவண்டி தேவையான வீல் ஆகியவை பழுதடைந்துள்ளதால் கீழ்கண்ட விவரப்படி தேவைப்படுகிறது.

1. தள்ளுவண்டிக்கு டப்பா 50 லிட்டர் – 200 எண்ணிக்கை
2. பேட்டரி வண்டிக்கு டப்பா 50 லிட்டர் – 200 எண்ணிக்கை
3. தள்ளுவண்டி வண்டி தசக்கரம் (முன்வீல்)– 80 எண்ணிக்கை
4. தள்ளுவண்டி வண்டி தசக்கரம் (பின்வீல்)– 160 எண்ணிக்கை

மேற்கண்ட பொருட்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.9,50,000/– வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும், அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

தலைவர் 26/05/2022
ஆத்தூர் நகர்மன்றம்